Eastern University, Sri Lanka
10 AUG 2012

# யாழ்ப்பாணத்து ஓவியரான ஆசை இராசையாவின் ஓவியங்களும் ஈழத்து ஓவிய வரலாற்றில் அவரின் இடமும்

பெயர்: செல்வி.அஜந்தா நாகராஜா

சுட்டெண்: CS 2649

பதிவிலக்கம்: EU/IS/2005/AC/155

நுண்கலைத்துறை

கலைகலாச்சாரபீடம்

கிழக்கு பல்கலைக்கழகம்

இலங்கை

2011

FAC77
Project Report
Library - EUSL

77

PROCESSED
Main Library, EUSL

## பொருளடக்கம் பக்கம்


நன்றியுரை I

முன்னுரை II-V

**இயல் 01** 01-19

**இயல் 02** 20-32

2.0 ஓவியர் ஆசை இராசையா

2.1 இராசையாவின் வாழ்க்கைப் பின்புலம்

2.2 ஓவியத்துறையில் நுழைந்தமைக்கான காரணமும் கலைஞர் பற்றிய கருத்தும்

2.3 கலையில் எதிர் கொள்ளும் சவால்களும் பிற துறையின் ஈடுபாடும்

2.4 கலைத்துறையில் இவர் மனதை பாதித்த அனுபவங்கள்

2.5 சிற்ப ஓவிய கலைஞர்கள் சார்ந்த எண்ணங்கள்

**இயல் 03** 33-53

3.0 ஆசை இராசையாவின் ஓவியப் படைப்புக்களும் அதனுடைய தனித்துவமும்

3.1 தரைக்காட்சி ஓவியங்கள்

3.2 இயற்பண்பு ஓவியம்

3.3 பிரதிமை ஓவியங்கள்

3.4 குறியீட்டு பாணியிலான ஓவியங்கள்

இயல் 04 54-71

4.0 ஆசை இராசையாவின் படைப்புக்கள்

4.1 ஓவிய வகைப்பாடு

4.1.1 இந்திய மரபின் கலைப்பாணி

4.1.2 இருள்ஒளி வேறுபாட்டை முதன்மைப்படுத்தும் கலைப்பாணி

4.1.3 இயற்பண்பு நிலைப்பட்ட கலைப்பாணி

4.2 படைப்புக்கள் உருவாகும் விதம்

4.3 படைப்புக்களில் பயன்படுத்திய ஊடகம் அல்லது வர்ணம்

4.4 பாணிகள் உத்திமுறைகள்

4.5 ஆசை இராசையாவை கவர்ந்த ஓவியர்கள்

4.6 நவீன ஓவியம் பற்றிய எண்ணம்

4.7 மாணவர்களுடைய ஓவியத்தறை பற்றிய கருத்துக்கள்

இயல் 05 72-75

0.5 ஈழத்தில் ஆசை இராசையாவின் இடம்

முடிவுரை 76-77

உசாத்துணைகள் 78

தகவல் தந்தோர் 79

# முன்னுரை

## 1.0 ஆய்வுத் தலைப்பு

"யாழ்ப்பாணத்து ஓவியரான ஆசை இராசையாவின் ஓவியங்களும் ஈழத்து ஓவிய வரலாற்றில் அவரின் இடமும்"

### 1.1 ஆய்வுக்கான காரணம்

ஆய்வின் தேவை கருதியும் இலக்கிற்காகவும் இரு வகையில் பிரித்து நோக்கப்படுகின்றது.

- பிரதான காரணம்
- துணைக்காரணம்

### 1.1.1 பிரதான காரணம்

யாழ் மாவட்டமானது கலைகளுக்கு சிறப்பு மிகு முக்கிய இடமாகும். அதில் ஓவியக்கலைக்கென தனிப்பாரம்பரியம் உண்டு. இவ்வாறாக யாழ்ப்பாணத்தில் உள்ள ஓவியர்களுள் ஆசை இராசையாவும் ஒருவராக திகழ்கின்றார். ஆசை இராசையாவுக்கென தனியானதொரு ஓவிய ஆளுமை உள்ளது. ஆசை இராசையாவைப் பற்றிய தகவல்கள் வெளி வந்திருப்பினும் அவை முழுமையான தகவல்களாக வெளிவரவில்லை என்ற காரணத்தினால் ஈழத்து ஓவிய வரலாற்றில் ஆசை இராசையாவுக்கு உள்ள இடத்தினை வெளிக்கொண்டு வருமுகமாக இவ்வாய்வு அவசியம் என எண்ணுகிறேன்.

### 1.1.2 துணைக்காரணம்

- ஓவியர் ஆசை.இராசையாவைப்பற்றிய முழமையான விடயங்கள் நூல் உருவில் அமைய வேண்டும் என்பதற்காகவும்

- பல்கலைக்கழகத்தில் ஓர் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவும்

## 1.2 ஆய்வுப் பிரச்சினை

இலங்கையில் தமிழ் ஓவிய மரபு, சிங்கள ஓவிய மரபு என இரு ஓவியப் பாரம்பரியங்கள் உள்ளன. அதில் சிங்கள ஓவியப்பாரம்பரியம் பற்றிய ஆய்வுகள் வந்துள்ளன. ஆனால் தமிழ் ஓவியப்பாரம்பரியம் பற்றிய ஆய்வுகள் மிகக் குறைவாகவே உள்ளது. இருப்பினும் அவை முழுமையானதாக இல்லை. தமிழ் ஓவிய மரபை முழுமையாக வெளிப்படுத்தவில்லை. எனவே இவ் நோக்கை பூர்த்தி செய்ய முயற்சித்துள்ளேன். இதன் மூலம் கூர்மையான ஆய்வாக அமைவதற்காக ஆசை இராசையாவை தெரிவு செய்துள்ளேன். ஆசை இராசையாவின் கலைப்படைப்பாக்கச் செயற்பாட்டின் மூலம் ஈழத்து ஓவிய வரலாற்றில் அவரின் இடத்தை மதிப்பீடு செய்வதற்காக தகவல்களை பெற்று பிரச்சினைகளுக்கான தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது.

## 1.3 ஆய்வின் முக்கியத்துவம்

- ஆசை.இராசையாப்பற்றிய தகவல்களை ஆவணப்படுத்துவதற்காக

- ஈழத்து தமிழ் மரபிலும் ஓவியவளர்ச்சி இடம் பெற்றுள்ளது என்பதை நிருபித்தல்.

## 1.4 ஆய்வு முறையியல்

சேகரிக்கும் தரவுகளிலும் அதன் நம்பகத்தன்மையிலும்தான் ஆய்வின் வெற்றி தங்கியிருக்கின்றது. சேகரிக்கப்படும் தரவுகள் செம்மையானதாக இருக்கும் பொழுது ஆய்வின் முடிவுகள் உண்மையானதாகவும் நம்பகத்தன்மை கொண்டதாகவும் அமையும். எடுத்துக் கொண்ட தலைப்பின் நம்பகத்தன்மையினை பரிசீலனை செய்வதற்காக பேட்டி காணுதல், நேரடியான கலந்துரையாடல் அதாவது கள ஆய்வு முறையியலாக அமைந்துள்ளது.

## 1.5 தரவு சேகரிக்கும் முறைகள்.

ஆய்வினை சிறந்த முறையில் செய்து முடிப்பதற்கு முதலாம் நிலைத் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகள் என சேகரிக்கப்பட்டுள்ளது.

### 1.5.1 முதலாம் நிலைத் தரவுகள்.

ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளன் களத்திற்கு நேரடியாக சென்று சேகரிக்கும் தரவுகளாகும் இத் தரவினை சேகரிப்பதற்கு பின்வரும் முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

#### 1.5.1.1 நேரடி அவதானமுறை

இங்கு ஆய்வாளன் ஆய்வுக்குரியவர் வசிக்கும் பிரதேசத்திற்கு சென்று உரையாடுதல் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

#### 1.5.1.2 நேரடி தனிப்பட்ட விசாரணை

முக்கியமான தகவல்கள் குறிப்பிட்ட கலைஞர்களாகவும் ஆசிரியர்களாகவும் இருப்பவர்கள் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டள்ளன

### 1.5.2 இரண்டாம் நிலைத் தரவுகள்

ஆய்வுடன் தொடர்புபட்ட ஏனைய மூலகங்களிடம் இருந்து பெறப்படும் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகள் எனப்படும். புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிக்கைகள், ஆண்டறிக்கைகள், புகைப்படங்கள், இணையத்தளங்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன

## 1.6 பகுப்பாய்வு

முதலாவது இயலானது யாழ்ப்பாண ஓவிய வரலாறு பற்றியதாகவும்

இரண்டாவது இயலானது ஆசை இராசையாவின் வாழ்க்கை பின்புலம் பற்றியதாகவும்

மூன்றாவது அத்தியாயத்தினுள் ஆசை இராசையாவின் ஓவியப் படைப்புக்களும் அவற்றின் வெளிப்பாடுகளும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் அத்தியாயத்தின் மூலம் ஓவியர் ஆசை. இராசையாவின் படைப்பாற்றளை அறியமுடியும்.

நான்காவது அத்தியாயத்தினுள் ஓவியர் ஆசை இராசையாவின் படைப்புக்களில், அவர் கையாண்டுள்ள வெளிப்படுத்தினமைகான உத்தி முறைகள்,

பாணிகள், படைப்புக்களுக்காக அவர் பயன்படுத்தியுள்ள மூலகங்கள், அதனை தெரிவு செய்தமைக்கான காரணங்கள் என்றவாறு அத்தியாயம் பிரிக்கப்பட்டு படைப்புக்களின் வலிமை பற்றி கூறப்படுகின்றது.

ஐந்தாவது அத்தியாயத்தினுள் ஓவியர் ஆசை இராசையா ஈழத்து ஓவிய வரலாற்றில் அவர் கொண்டுள்ள இடமும், மதிப்பும் எத்தன்மையினை கொண்டுள்ளது என்பது நிரூபிக்கப்படுமாறு இவ் அத்தியாயம் பிரிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக ஆய்வுக்கான முடிவுரைகளும் தகவல் தந்துதவியோர்களது விபரங்களும் அமைகின்றது. இதனால் ஆய்வானது நம்பகமானதாகவும் திடமானதாகவும் அமையும் என எண்ணுகிறேன்.